**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**I.A.No. 11/2026 in O.S. No.597/2025**
**Deposition of Witness for the Plaintiff/Petitioner – PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **மணி** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **வெள்ளைசாமி** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **அருகாம்பாளையம், தாந்தோணிமலை** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 46 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 16.04.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் அசல் வழக்கின் பாகப்பிரிவினை கோரி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எனக்கும், 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளுக்கும் இடையே சமரச உடன்பாடு ஏற்பட்டு, இம்மனுவினை நானும், 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளும் இணைந்து தாக்கல் செய்துள்ளோம். இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சமரச மனுவில் உள்ள சரத்துகளின்படி அசல் வழக்கில் சமரச தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள சரத்துக்கள் தீர்ப்பாணையின் ஒரு அங்கமான பாவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமரச மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தையும்

முழுமையாக படித்தும், புரிந்து கொண்டும் கையொப்பம் செய்தேன். அசல் வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள வழக்கு சொத்தை தற்போது நானும், 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளும் சுமூகமாக பிரித்து கொண்டோம். அவ்வாறு சமரசத்தின் மூலம் வழக்கு சொத்தை பிரித்து கொண்டதில், நான் சொத்திற்கு பதிலாக 1வது பிரதிவாதியிடமிருந்து தொகையாக ரூ. 1,00,000 பெற்றுக்கொண்டேன். சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள ஏ அட்டவணை சொத்து எனது தகப்பனார் 1வது பிரதிவாதி வெள்ளைசாமிக்கு ஒதுக்கப்பட்டது. சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள பி அட்டவணை சொத்து 7 வது பிரதிவாதி தங்கராசு, 8வது பிரதிவாதி வெங்கடேஷ் ஆகீயோர்களுக்கு ஒதுக்கப்பட்டது. சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள சி அட்டவணை சொத்து பொது பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படியான சங்கதிகளை ஒப்புக்கொண்டுதான் நானும், 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் சமரச மனுவில் கையொப்பம் செய்தோம். ஆகவே, சமரசமனுவின் படி அசல் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ம.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.